# ஈழத்துக் கீர்த்தனை மரபு
# ஈழத்து இசை நடன மரபினை ஆய்வுத்தளமாகக் கொண்ட ஓர் இசையியலாய்வு

**முனைவர் (திருமதி) சுகன்யா அரவிந்தன்,**
*முதுநிலை விரிவுரையாளர்,*
*இசைத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்.**

*ஈழமும் தமிழகமும் ஒத்த பண்பியல்புகளைக் கொண்ட சமூகங்கள் வாழ்கின்ற நாடு. ஒருகாலத்திலே இரு பிரதேசங்களும் இணைந்திருந்ததாகவும் பிற்பட்டகாலங்களிலே ஏற்பட்ட கடல்கோள்கள் இவ்விரு நிலப்பரப்புக்களைப் பிரித்தன என்பதும் வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்ற கருத்து. ஆயினும் ஒரே பண்பாட்டைப் பின்பற்றுகின்ற சமூகங்கள் அருகருகே வாழ்வதால் பிரதேசங்கள் வேறாக இருந்தாலும் வழக்கிலிருக்கின்ற மொழி, பண்பாடு, கலை, கலாசார விழுமியங்கள் அனைத்திலும் ஒத்த இயல்புகள் இருப்பதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம். இவ்வாறான ஒப்புமைக்குப் பல காரணங்கள் உண்டு. இருதேசங்களின் புவியியல் அமைவிடம், வாழுகின்ற சமூகங்களுக்கிடையிலான ஒப்புமை, இதன்காரணமாகக் காலந்தோறும் இரு பிரதேசங்களுக்குமிடையிலான கலாசாரப் பரிமாற்றங்கள் என்பன முதன்மையாகக் காணப்படுகின்றன. இந்த நிலையிலே தமிழகத்திலே ஊற்றாகி அண்டம் நிறைந்து வளர்ந்து நிற்கின்ற கலைகள், ஈழத்திலும் குறிப்பாக தமிழ்பேசும் சமூகம் செறிந்து வாழுகின்ற யாழ்ப்பாணத்திலும் ஆழமாகக் காலூன்றியது வியப்புக்குரிய விடயமல்ல.*

*தமிழகத்திலே வளர்ந்த இசைக்கலை அதேகாலப்பரப்பிலே ஈழத்திலும் அதே பரிமாணங்களோடு வழக்கிலிருந்திருக்கின்றது.*

*இந்த பின்னணியிலே ஈழத்தின் இசை மற்றும் நடனக்கலை மரபிலே கீர்த்தனைவடிவம் பெற்றிருந்த இடம் பற்றி ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை எழுதப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:**

*ஆடல் மரபு, கீர்த்தனை, பண்பாட்டுத்தனித்துவம், பண்பாட்டு அடையாளம், பாரம்பரியம்.*

## *1.0. முன்னுரை*

*தமிழகத்திலே கீர்த்தனை மரபின் காத்திரமான வியாபகத்தினை சங்கீத மும்மூர்த்திகள் காலத்திலிருந்தே பார்க்கமுடிகின்றது. கீர்த்தனை வடிவத்தை செழுமைப்படுத்தி பிரபலப்படுத்திய பெருமை சற்குரு ஸ்ரீ தியாகராஜரையே சாரும். இந்த நிலையிலே ஈழத்திலும் கீர்த்தனைகள்*

யாக்கப்பட்டிருக்கின்றன. ஈழத்து தமிழ்ப்புலவர்கள் பலர் கீர்த்தனைகள் பலவற்றை அமைத்திருக்கின்றார்கள்.

ஆனால் தமிழக்கத்திலே கீர்த்தனைகள், இசை துதியாகப்பாடப்பட, ஈழத்திலே இறைதுதியாகவும், சமூகத்தை வழிப்படுத்தும் கருவியாகவும் திகழ்ந்திருக்கின்றது என்பது மிகவும் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகக் கொள்ளலாம்.

இந்த நிலையிலே ஈழத்திலே கீர்த்தனைகளின் தோற்றம், வியாபகம், இசை மற்றும் நடனத்துறைகளிலே ஈழத்துக் கீர்த்தனைகளின் வகிபாகம் போன்றவை பற்றி இங்கு விபரமாக நோக்கப்படுகின்றது.

### 1.1. ஆய்வு முறையியல்

ஈழத்திலே எழுதப்பட்ட கீர்த்தனைகள் பல பதிவிலிடப்படாமலும், பதிவிலிடப்பட்டவை கடந்தகாலங்களிலே ஏற்பட்ட தவிர்க்கமுடியாத அசாதாரண சூழல்களாலும் அழிக்கப்பட்டவை போக எஞ்சியிருக்கின்ற, எமக்குக்கிடைக்கக்கூடிய புலவர்களின் படைப்புக்கள் மாத்திரமே இங்கு ஆய்வுத்தளங்களாகக் கொள்ளப்படுகின்றன.

மேலும் தேடல்களின் போது கிடைக்கப்பெற்ற கீர்த்தனைகள், ஈழத்துக்கீர்த்தனைகளது ஒலிப்பதிவுகள், நூல்கள், ஒலித்தட்டுக்கள் என்பன தகவல் தரும் மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு திரட்டப்பட்ட தகவல்களினடியான வரலாற்றாய்வாகவே இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

### 1.2. ஈழத்துக்கீர்த்தனை மரபு

ஈழத்துக்கீர்த்தனைகள் பற்றிப்பேசுகின்ற பொழுது கிபி 18ம் நூற்றாண்டிலிருந்து ஈழத்துக்கீர்த்தனைகளுக்கான தரவுகள் பதிவுகளாகக் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அதாவது தமிழகத்திலே சங்கீத மும்மூர்த்திகளும் தமிழிசை மூவரும் வாழ்ந்த சமகாலங்களிலே ஈழத்திலும் கீர்த்தனைகள் படைக்கப்பட்டிருக்கின்றன.

இக்கீர்த்தனைகள் எழுந்த சமூகப்பின்புலம் பற்றிநோக்குவது கீர்த்தனை எனப்படுகின்ற இசைவடிவம் சமூகப்பண்பாட்டுப்புலங்களிலே கொண்டிருந்த இடத்தினைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

தமிழகத்திலே கீர்த்தனைகள் பெரும்பாலும் பக்தி சார் இலக்கியங்களாகவே படைக்கப்பட்டன. இறைவனை இசையாகக் கண்ட பண்பாட்டின் வியாபகமாக இது பார்க்கப்படலாம். இறை அற்புதங்களையும், அவனருள் பெறுவதொன்றன்றி வேறில்லை கதி, எனக்கொண்டு இசையினூடாக இறைவனைத் தரிசித்தவர்களால் பாடப்பட்டவைகளாகவே கீர்த்தனைகள் காணப்படுகின்றன.

ஈழத்திலே மேலைத்தேயத்தவர்களால் சைவமும் தமிழும் சீர்குலைக்கப்பட்டு வருகின்ற வேளையிலே சமூகத்தை சீர்ப்படுத்தும் ஒரு கருவியாகவும் இசை சமூகத்திலே பங்கு

வகித்திருக்கின்றது. அதேவேளை இறைவழிபாடாகவும் இவ்விசை பயன்படுத்தப்பட்டிருக்கின்றமையைக் காணமுடிகின்றது.

### 1.3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கீர்த்தனைகள்

ஈழத்திலே சைவத்தையும் தமிழையும் காத்த பேராளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய கீர்த்தனைகள் சில கிடைக்கப்பெற்றிருக்கின்றன. (கதிர்காமத்திருமுருகன் கீர்த்தனைகள்: ஸ்ரீ காந்தா அச்சகம்- 1945) இவற்றுள்ளொன்றை இங்கு எடுத்துநோக்கலாம்.

இராகம் : கல்யாணி
தாளம் : ரூபகம்

பல்லவி
என்மே லிரக்கமில்லையா சாமி- புதல்வனுக்குத்தந்நை
இரங்காதிருந்தா லென் சொல்லும் பூமி

அனுபல்லவி
தன்னிகரில்லாக் கதிரைமலை வாழுந்
தற்பரானந்த சாமி சுகாரம்ப
வுன்னுபய சரணாம்புய மல்லாம
லொன்றும் புகலிடமின்றினியாகுதல்

சரணங்கள்
துய்யவடட்வரத்தோ ரெழுத்தையுஞ்
சொல்லிலே னென்செய்வேன் சிறியேன்
கோடி சூரியப் பிரகாசமான வரோதய சுவாமி
உய்வகையறியேன் செய்யநின் னாமத்தைநினையேன்
பவந்தீரா துலைகின்றேன் வினையேன்
அன்னை தெய்வமு நீயே அடி யேனுக்குய் வருள்வாயே

இவ்வாறு பல சரணங்கள் தொடரும். இங்கு கீர்த்தனைக்கான இராக, தாள வரையறைகள், பல்லவி, அனுபல்லவிக் கட்டமைப்புகள், என்பன முறையாக வகுக்கப்பட்டிருக்கின்றன. தவிர, முத்துஸ்வாமி தீட்சிதர் அவர்களுக்கேயுரிய சிறப்பாகக் கருதப்படக்கூடிய மத்திமகால சாகித்யக் கையாட்சியையும் இங்கு பார்க்கமுடிகின்றது. எனவே தமிழகத்தின் தொடர்ச்சி ஈழத்திலே விரிவாக்கம் பெறுவதை காணமுடிகின்றது.

### 1.4. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை கீர்த்தனைகள்

ஆசுக்கவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களுடைய கீர்த்தனைகளும் மிகச்சிறப்பான போக்கினை ஈழத்து கீர்த்தனை மரபிற்கு வழங்கியிருக்கின்றது. எடுத்துக்காட்டாக,

இராகம் : சாருகேசி

தாளம்: ஆதி

பல்லவி

ஏழையென் முகம்பாரையா — ரத

லலித கணபதி- ஏழையென் முகம்பாரையா

அனுபல்லவி

வாழை பூ கந்தெனை

மாவெகின் சோலை சூழ்

வளத்தைத் திகழ்தரு பரத்தைப் புலத்திலைங்

கரத்துத் தமகள முகத்துத் தமபர —ஏழை

சரணம்

வாழ்வதை எண்ணி நையுதே- மனம்

மயலுற்றடை கதி பிறிதற்றிது கணம்

பாழ்வினை தன்னை வையுதே — பல

பவுள்சு மினல்கன வெனவ றியவெனை

ஆளவா — ஆகுவா- காவரு ணாயகா

ஆசி யங்குச பார வரபல

பூசி சம்ப்ரம ஞான நிருமல

(கருணாகரப்பிள்ளையார் பாமாலை: ஆசுகவி கல்லடிவேலன்- 2000)

என்றவாறு பல சரணங்கள் தொடரும். இங்கு தமிழ்மொழியின் புலமையினை காணுகின்ற அதேவேளை சந்தவகுப்புக்களும் கீர்த்தனைகளிலே பயன்படுத்தியவாறினைக் கண்டுகொள்ள முடிகின்றது. கீர்த்தனை வடிவங்களிலே பல இசையியல் சிறப்புக்களை ஈழத்துப்புலவர்கள் புகுத்தியிருக்கிறார்கள். தவிர மேற்காட்டடப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் இரண்டும் தமிழ்ப்புலமையின் உச்சத்தினை எடுத்துக்காட்டுவதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. தவிர மேற்குறிக்கப்பட்ட கீர்த்தனையின் சரணப்பகுதியிலே,

ஆளவா — ஆகுவா- காவரு ணாயகா

*தகிட தாம் - தகிட தாம் - தகதிமி - தகிட தாம்*

ஆசி யங்குச - பாச - வரபல

*தகிட தகதிமி - தகிட தகதிமி*

பூசி சம்ப்ரம — ஞான - நிருமல

*தகிட தகதிமி- தகிட தகதிமி*

என்றவாறாக சொற்கட்டுக்களுக்கமைவாக பதங்கள் அமைக்கப்பட்டிருப்பதும் சிறப்புக்குரியது.

### 1.5. பிற கீர்த்தனைகள்

பல புலவர்கள் கீர்த்தனைகளை எழுதி இறைபுகழ் பாடுவது மாத்திரமல்லாமல் சமூகத்தை நேர்வழியிலே செலுத்துவதற்குப் பலமாக இருந்திருக்கின்றார்கள்.

அந்தவகையிலே நல்லைக்கந்தர் கீர்த்தனை 38கீர்த்தனைகள் அடங்கிய கீர்த்தனைத் தொகுப்பையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் சகோதரர் பரமானந்தப்புலவர் (1830 — 1878) இயற்றியுள்ளார். இவை முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. (கதிர்காமத்திருமுருகன் கீர்த்தனைகள்: ஸ்ரீ காந்தா அச்சகம்- 1945: பக் : 1) நவவண்ணக்கீர்த்தனைத் தொகுப்பை செய்கு அலாவுதீன் புலவர் (1890 — 1938) இயற்றினார். (ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம் : 376), மல்லை நமசிவாயப் புலவர் (1860- 1942) சிங்கை வேலன் கீர்த்தனைகள், கும்பிளாவளைப் பிள்ளையார் கீர்த்தனைகள், எனப்பல கீர்த்தனைத் தொகுப்புக்களை எழுதினார். யாழ்ப்பாணம், உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பிப்புலவர் (1830-1878) சிவதோத்திரக்கீர்த்தனைத் தொகுப்பினை எழுதியிருக்கின்றார். (ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம் : 180), ஆசுகவி கல்லடிவேலுப்பிள்ளை (1860- 1944) கதிர்காம சுவாமி கீர்த்தனம், உரும்பிராய் கருணாகரவிநாயகர் தோத்திரப்பாமாலை முதலியவற்றை இயற்றியுள்ளார். (ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம் : 409) உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் கந்தவன கதிர்வேலன் மீது கீர்த்தனைகள் பலவற்றை இயற்றியிருக்கின்றார். (சிவசம்புப்புலவர் பிரபந்தத்திரட்டு : 2000: 256) இவர் ஈழத்துக்கீர்த்தனை மரபிலே மிக முக்கிய இடத்தைப் பெறுபவர்.

இவ்வாறான முன்னொடிகளோடு ஈழத்துக்கீர்த்தனை மரபு ஒன்று ஆரம்பமானது. காலப்போக்கிலே பல கவிஞர்களும் இவர்களது பணியிலே தொடரத்தொடங்கினர். சிவத்திரு யோகர்சுவாமிகள் மிக முக்கியமானவர். இவருடைய நற்சிந்தனைக்கீர்த்தனைகள் பல வாழ்வியல் தத்துவங்களை சமூகத்துக்கு எடுத்துச் சொல்லுவனவாக அமைந்திருக்கின்றன.

இராகம் : சாருகேசி

தாளம் :ஆதி

பல்லவி

'அந்த வாக்கும் பொய்த்துப் போமோ

ஆசான் நல்லூர் வீதியிலருளிய

அனுபல்லவி

இந்த ஆன்மா நித்தியமென்ற — அந்த வாக்கும்'

வாழ்வியல் தத்துவக்கருத்துக்களுடன் அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் இவருடைய நற்சிந்தனைக் கீர்த்தனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

***2. நடன மரபு***

*இசை மரபிலே வளர்ந்த கீர்த்தனை மரபானது காலப்போக்கிலே நடனத்துள்ளும் இணைத்துக்கொள்ளப்பட்டது.*

*தேவரடியார் மரபானது சின்னமேளமாக ஈழத்திலே வழக்கிலிருந்து, சமூகப்பிறழ்வுகள் காரணமாக அவை சமூகத்திலிருந்து விலக்கப்பட்டு, ஒரு குழுவினருக்காக மாத்திரம் என்ற வரையறையோடு பயிலப்பட்டுவந்த நடனக்கலை, பின் நடனத்தின் காத்திரமுணர்ந்தோரால் அனைவருக்குமான கலைமரபாக சமூகத்தினுள்ளே இணைக்கப்பட்டது வரலாறு.*

*இந்த நிலையிலே நடனம் செந்நெறிக்கலைவடிவமாக சமூகத்தினுள் நுழைந்தது. மார்;க்கம் என்கின்ற கட்டமைப்புக்குள் நடனக்கலைவடிவம் தன்னை வரையறுத்துக்கொண்டது. இந்த மார்க்கத்தினுள் ஒரு பகுதியாக கீர்த்தனைகளும் இணைக்கப்பட்டிருந்தது. இது கலைவரலாறு. இந்த வரலாறு ஈழத்திலும் பின்பற்றப்பட்டது.*

*தமிழகம் சென்று கலை பயின்று வந்தோரால் நடனம் செந்நெறிக்கலை வடிவமாக வளர்த்தெடுக்கப்பட்டது. பின்வந்த காலங்களிலே சமூகத்தினுள் நடனக்கலைக்குரிய காத்திரம் உணரப்பட, இக்கலைவடிவத்துக்கான சமூகக்கேள்வி அதிகரிக்கத்தொடங்கியது. ஈழத்து ஆலயங்கள் தோறும் நடன நிகழ்ச்சிகள் தவறாமல் இணைத்துக்கொள்ளப்பட்டன. இந்த நிலையிலே அந்த கோயில் சார்ந்த பாடல்கள் கீர்த்தனைகளாக்கப்பட்டு நடனநிகழ்ச்சிகளிலே இணைத்துக்கொள்ளப்;பட்டன. இந்த நிலையிலே மிக முக்கியமானவராக ப்ரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் திகழ்கின்றார். ஈழத்திலே நடனக்கலையின் வியாபகத்துக்கு தன்னுடைய பாடல்களால் வடிவம் கொடுத்தவர்.*

*இவர். 1930,40 களிலே கலாசேத்திரத்திலே இணைந்து ருக்மணிதேவி அருண்டேல் அவர்களிடம் நடனத்தையும், பாபநாசம் சிவன் அவர்களிடம் இசையினையும் நேரடியாகப்பாடம் கேட்டவர். இந்த அனுபவம் இவரை ஏராளமாக எழுதவும் செய்தது. ஏராளமான கீர்த்தனைகளை இவர் நடனத்துக்காக எழுதியிருக்கின்றார். இசை தெரிந்த நடனக்கலைஞர் எழுதவும் தேர்ந்திருப்பின் அவருடைய கீர்;த்தனைகளின் காத்திரம் மிகச்சிறப்பாக அமையும் என்கின்ற கலைத்தத்துவத்துக்கமைவாக இவருடைய கீர்த்தனைகள் பல ஆக்கப்பட்டிருக்கின்றன. இவர் நடனத்துக்கான கீர்த்தனைகள் என்பதற்கப்பால் தன்னுடைய நாட்டிய நாடகங்களிலும் பெருமளவிலே கீர்த்தனை வடிவங்களை இணைத்திருக்கின்றார். இவருடைய வழிகாட்டலிலே ஈழத்து நடனமரபிலே ஈழத்துக் கீர்த்தனைகள் காத்திரம் தெரியாமல் நுழைந்துகொண்டன.*

***3. முடிவுரை***

*ஈழத்துக் கீர்த்தனை மரபு என்பது தனக்கேயுரிய தனித்தவங்களோடு கூடி வளர்த்திருக்கின்ற ஒரு காத்திரமான கலை வடிவம். இது ஈழத்திலே ஆரம்பத்திலே தமிழ் தேர்ந்த புலவர்களால் இசைவழி இறை பணி என்கின்ற தத்துவத்திற்கமைவாகவே எழுதப்பட்டு வந்த கலைவடிவமாக இருந்தது. பிற்காலத்திலே கீர்த்தனையின் காத்திரமுணர்ந்த நடனக்கலைஞர்களும் ஈழத்துக்கீர்த்தனைகளுக்கு முக்கியம் கொடுத்து வருகின்றமை ஈழத்து இசைமரபுக்கான ஒரு*

காத்திரமான போக்கினை கீர்த்தனை அமைத்துத்தந்திருக்கின்றது என்கின்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்:**


*1;. சதாசிவம். ஆ: ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம், 1966, இலங்கை சாகித்ய மண்டலம்.*

*2. கல்லடிவேலன் : கருணாகரப்பிள்ளையார் பாமாலை,2000, ஸ்ரீ காந்தா அச்சகம்*

*3. சுகன்யா அரவிந்தன்: இசையின் சமூகவியல் ,2021, ஆய்வுக்கட்டுரைகள்: ஹரிகணன் பதிப்பகம்.*

*4. சுதர்சன். சே. (தொகுப்பு) சிவசம்புப்புலவர் பிரபந்தத்திரட்டு : 2000: குமரன் பதிப்பகம்*

*5. ஆறுமுகநாவலர்:: கதிர்காமத்திருமுருகன் கீர்த்தனைகள்: 1945 ஸ்ரீ காந்தா அச்சகம்*


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research